சிலபல கூறுமுன் சிந்திக்கவேண்டும்!

Phone No. 4502 | விலை அணு ஒன்று]

Regd. No. M. 5458 | [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. **MALAI MANI**

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (16—11—49) ✿ வெளியூர் (17—11—49) | இதழ் 92

வெறுப்பை விளக்குவதே எங்கள் தீமூட்டும்முயற்சி!

அன்னிய ஆடையை அக்கினியில் இட்டது எதன் பொருட்டு?

எதனை எதிர்பார்த்து இராவண காவியம் தடுக்கப்பட்டது?

மந்திரி மாதவரின் முரண்படும் முணுமுணுப்பு!

"கம்பர் போக்கு பிடிக்காத சிலர், ஜாதி பாகுபாட்டை கம்பர் ஆதரிக்கிறார் இராமகாதையில் என்று தவருகத் தீர்மானித்துக்கொண்டு, கம்பராமாயணத்தை நெருப்பிலிட முயற்சிக்கிறார்கள். தாள்களில் அச்சடிக்கப்பட்டுள்ள காவியத்தைத்தான் இவர்களால் தீயிட முடியுமேயன்றி, கம்பரால் போதிக்கப்பட்டு மக்கள் இருதயங்களில் ஆழப் பதிந்திருக்கும் உயர்ந்த இலட்சியங்களையும், கருத்துக்களையும் இவர்களால் கொளுத்திவிட முடியாது."

—மந்திரி மாதவமேனன்—

கம்பருக்குக் கவித்திறம் கிடையாது என்பது அல்ல, காவியத்தைத் தீயிலிட வேண்டுமென்பதற்கு நாம் கூறிய காரணம். அந்தக் கவித்திறம், திராவிட இனத்தின் சிறப்பையும், எதிர்கால வளர்ச்சியையும் கொலை செய்ய பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் நமது குற்றச்சாட்டின் முழு விவரம். இரு பேராசிரியர்களோடு, அன்பு முறையில் நின்று, எங்கள் கட்சியை எடுத்துக்கூறி வழக்காடி இருக்கிறோம். எங்களுக்கு, மந்திரி மாதவமேனனிடம் இருக்கும் பற்றுதலையும் பாசத்தையும் விட, அவ்விரு பேராசிரியர்களிடமும் உண்டு அதிக அளவில். கம்பரை நேரடியாகக்கற்று, கவிநயத்தைப் புரிந்து கொள்ளும் தமிழ் அறிவு, மந்திரி மாதவருக்கும், உண்டு என்று நாம் கூற முன் வந்தாலும், மறுத்துப் பேச இந்த அமைச்சர் ஆர்வத்தோடு வெளிவருவார் என்பதை நாம் அறிவோம். வால்மீகியைப் படித்துத்தான் கம்பரின் கவிதா சக்தியைத் தெரிந்து கொண்டதாக அதே கூட்டத்தில் மந்திரி மாதவர் கூறி இருக்கிறார். எனவே, இந்த அமைச்சர் கம்பராமயணத்தின் போக்கை எவ்வளவு தூரம் புரிந்து கொண்டிருப்பார், என்பதையும், நமது குற்றச்சாட்டுகளின் உண்மைகளை, அவரால் எந்த அளவில் அறிந்து கொண்டிருக்க முடியும் என்பதையும் தமிழர்கள் அறிந்தே இருக்கிறார்கள். சட்ட மந்திரி என்ற விருது மட்டும் கனத்துக்கு இல்லாமல் இருந்திருக்குமானால், இந்தக் கனத்தைக் கணக்கெடுத்தும் பார்த்திருக்க மாட்டார்கள் கம்பருக்கு விழாவெடுத்த கூட்டம்! வருணாஸ்ரம போதனை கம்பன் காவியத்தில் இருக்கிறதா, இல்லையா என்ற ஆராய்ச்சி இப்பொழுது வேண்டாம். பிரிதொருசமயம் பார்த்துக் கொள்வோம்.

கம்பன் காவிய ஏட்டைக் கொளுத்திவிடுவதாலேயே, அக்காவியத்தில் ஏற்பட்டு விட்டிருக்கிற கேடான கருத்துக்கள் அனைத்தும் உடனடியாக நாட்டைவிட்டுத் தொலைந்துவிடும் என்று நம்பும் 'பேரறிவாளர்', எங்களில் எவரும் கிடையாது. இதற்கு மனவளம் பொதுவாக ஆளவந்தார்களிடமும், குறிப்பாக மந்திரி மாதவா இடமும்தான் இருக்கிறது—இருக்க முடியுமேயன்றி, வேறு எவரிடமும் இருக்கமுடியாது. காவியத்தைத் தீயிலிடவேண்டுமென்றது, இராமகாதையின் உண்மை நிலையைத் தமிழ் மக்கள் உள்ளவாறு உணர்ந்து கொள்ள எடுத்துக்கொண்ட முயற்சியாகும். இராமகாதையைக் கடவுள் காதை என்று நம்பி, கருத்தழிந்து காலம் கழித்துவரும் திராவிட மக்களை மயக்கம் தெளிந்து திராவிட நெறிதனைக் கடைப்பிடிக்கச் செய்ய மேற்கொண்டதாகும் இந்தமுயற்சி. இதனைக் கேலி செய்து பார்க்கிறார், தமது செயலுக்குத் தாமே தவருனபொருளைக் கற்பித்துக் கொண்டு, கனம் மாதவ மேனன்!

ஒரு நாலு முழம் இங்கிலாந்து துணியைக் கொளுத்தி விடுவதினாலேயே, மான்செஸ்டரும் லங்காஷயரும் அஸ்தமித்து விடும் என்று தீர்மானித்துக்கொண்டா, மந்திரியின் கட்சியினர் தீ மூட்டும் திருவிளையாடல் புரிந்தனர்? இல்லையே; அன்னியத் துணியை விலக்குவது இன்றியமையாதது என்பதை, இந்த நாட்டு மக்களுக்கு வற்புறுத்தத்தானே, தீயிடும் திருப்பணியைச் செய்தனர் காங்கிரசார்?

அவர்கள் எரித்தது அன்னிய ஆடை. நாங்கள் எரிக்க வேண்டுமென்று கூறியது திராவிட மக்களின் ஜீவனைப

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

பஞ்சப்படியை உயர்த்தவோ விலை உயர்வைக் குறைக்கவோ முடியவில்லை

மத்திய ஆட்சி குறுக்கிடுகிறதாம்!

நிதி அமைச்சரின் பஞ்சப்பாட்டு

"விலைகிராக்கிப்படியை உயர்த்த வேண்டுமென்று சர்க்காரிடம் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இப்போதுள்ள நிதி நிலைமையில் அக்கோரிக்கைகளுக்கு இணங்குவது சாத்தியமல்ல"

என்று நிதி அமைச்சர் அண்மையில் சட்ட சபையில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் முறையில் தெரிவித்திருக்கிறார். நாளுக்குநாள் விலை யேற்றம் விஷம்போல ஏறிவருவதை வாசகர்கள் அறிவர். இந்நிலையில் விலைக் கிராக்கிப்படி ஏதேனும் ஓரளவு உயர்த்தாலன்றி மக்கள் நிம்மதியாக வாழ முடியாது. எனவேதான் பஞ்சப்படியையுயர்த்தும்படி அரசியலாருக்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. காலநிலை அறிந்த அரசியலார் இதற்கு ஏதேனும் பரிகாரம் தேட முற்பட வேண்டும். ஆனால் நமது சென்னை அரசியலார் நிதி நிலைமையைச் சுட்டிக் காட்டி கையை விரிக்கின்றனர். சரி, விலைவாசி உயர்வுக் கேற்ப பஞ்சப் படியை உயர்த்த முடியாவிட்டாலும் விலைவாசி ஏற்றத்தையேனும் தடுக்கும் சக்தி நமது அரசியலாருக்கு உண்டோவெனில், அதற்கும் வழியில்லை. "விலைவாசி உயர்வைத் தடுப்பது மத்திய அரசியலாரின் சக்திக்குட்பட்டதாகும்." என்று நிதி அமைச்சர் கூறுகிருர். மத்திய ஆட்சியால் விளையும் இடையூறுகளுக்கு இஃதோர் எடுத்துக் காட்டு. இன்னும் இம்மாகாண ஆட்சியாளர் எதையும் சுயமாக செய்ய முடியாதநிலை நீடித்துக் கொண்டே போனால், நம்மவர்படும் இன்னல்களும் நீடிக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இப்படிப்பட்ட நிலை மாறி எண்ணியதை எண்ணியவாறே செய்து, இம் மாகாணத்தை வாழ்விக்கச் செய்யும் உண்மையான சுயாட்சி ஏற்படும் நாள் என்றோ?

ஆர். எஸ். எஸ். தலைவர் அடித்துப் பேசுகிருர்!

ஜால்பூரில் 13-ந்தேதியன்று பத்திரிகை நிருபர் மாநாடொன்றில் பேசியிருக்கும், ஆர். எஸ். எஸ். தலைவர் தோழர் எம். எஸ். கோல்வாலகர், ஹிந்துமகாசபையோடு தனது சங்கத்திற்கு எவ்விதத் தொடர்பில்லையென்று தீவிரமாக வலியுறுத்திப் பேசியுள்ளார். அரசியல் சம்பந்தமாக சங்கம் மேற்கொள்ளப் போகும் போக்குஎன்ன என்பதுபோன்ற கேள்விகளை ஆர். எஸ். எஸ். தலைவர் மழுப்பிவிட்டாரென்றுசெய்திக் குறிப்பு கூறுகிறது. வெளிநாட்டு ஆதிக்க வுணர்வைத் தகர்ப்பதில் சங்கம் சர்க்காரோடு ஒத்துழைக்குமென்றும் குறிப்பிட்டாராம்.

அணுசக்தி ஆயுத மீது 'நிபந்தனையற்றத் தடை' வேண்டும்!

—:(O):—

ஹிரோஷிமாவில் குண்டு வீசியதற்குக் கண்டனம்

ஹிரோஷிமாவில் அணுக்குண்டு வீசியதைக் கண்டித்து ரஷ்யா 14-ந் தேதியன்று ஐ. நா. பொதுச் சபையில் கருத்துத் தெரிவிக்கிறது.

ஐ. நா. வில் சிந்தர சோவியத் பிரதிநிதி தோழர் ஜேகப் மாலிக் இது பற்றிப் பேசுகையில் ஹிரோஷிமா 'அமைதியான ஜப்பானிய நகராகும்' என்றும், அது எதிரி வட்டாரத்தில் இருந்தாலுங்கூட இராணுவ நடவடிக்கை பெறுவுமின்றி வைப்பாற்றப்பட்டிருக்க வேண்டிய நகராகுமென்றும் குறிப்பிட்டார்.

ஐ. நா. பொதுச் சபையில் அரசியல் கமிட்டி, அணுசக்தி மீது சர்வதேசக் கட்டுப்பாடு பற்றி விவாதிக்கையில் தோழர் மாலிக் இவ்வண்ணம் குறிப்பிட்டார்.

அணுசக்தி ஆயுதங்கள்மீது நிபந்தனையற்றத் தடை விதிக்க வேண்டுமென்று தோழர் மாலிக் தொடர்ந்து குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சியைத் தடைசெய்வதேதற்கு?

மக்கள் நிலையை வளமுறச்செய்தால் ஆபத்தில்லையே, அவர்களால்!

இந்தோனேஷியக் குடியரசு முடிவு பற்றி பிரதமர் ஹட்டா

புதிதாக நிறுவனமாகியுள்ள இந்தோனேஷிய ஐக்கிய நாடுகளுக்குக் கம்யூனிஸம் எந்த வகையிலும் ஆபத்தை விளைவிப்பதோ அச்சம் தரத்தக்கதோ அல்லவென்று இந்தோனேஷியக் குடியரசுப் பிரதமர் டாக்டர் மகமத ஹட்டா 13-ந் தேதியன்று குறிப்பிட்டுள்ளார்.

நம் மக்களின் நிலைமையைச் சீர்ப்படுத்தி முன்னேறி விட்டோமானால், கம்யூனிஸம் எந்த வகையிலும் நமக்கு ஆபத்து விளைவிக்காது என்று ஹட்டா மேலுங் குறிப்பிட்டார்.

இந்தோனேஷியக் குடியரசின் புதிய ஜனநாயக அரசியலமைப்பில் கம்யூனிஸ்டு கட்சி சட்ட விரோதமாக்கப்படாதென்று பிரதமர் வாக்குறுதியளித்தார்.

அங்கிருந்தும் புறப்பட்டார்!

டாய்ப்பே(பார்மோஸா), நவ.14-சியாங்கேய்ஷேக் இன்று தனது தற்காலிக சர்க்கார் தலைமை நிலையத்தை விட்டு இங்கிருந்து இன்று சன்கிங்கிற்குப் புறப்பட்டார். அவருடன்கூட அவரது தலைமகன் சியாங்கின்-குவும் புறப்பட்டார்

மாலை மணி

சென்னை 16—11—49 புதன்கிழமை

பொருமைப் புயல்!

சென்னை நகரை எந்தவகையிலேனும், தமிழர்களிடமிருந்து தட்டிப் பறித்துக்கொள்ள வேண்டுமென்று விஷமஞ் செய்து வந்த ஆந்திரத் தலைவர்களுக்கு, இறுதியாக நல்லறிவு பிறந்து, சென்னை கோரிக்கையைக் கைவிட்டு விட்டு, ஆந்திர மாகாணத்தை அமைத்துக் கொண்டாலே போதுமென்ற முடிவிற்கு வந்து, அதனை ஒரு தீர்மான மூலமாகவும் தெளிவுபடுத்திவிட்டார்கள். அதனை சென்னை சர்க்காரும் ஏற்றுக்கொண்டு டெல்லிக்குத் தகவலும் கொடுத்தாகிவிட்டது.

சென்னை நகர் விஷயமாக, இரு மொழி மக்களிடமும் அவசியமில்லாமல் வளர்த்துவிடப்பட்டிருக்கிற மனக்கசப்பு மாற, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான், இருசாராருக்கும் இருந்துவரும் பொறுப்புள்ள பணியாகும். இதனை ஆந்திரத் தலைவர்களிலே பலர் உணர்ந்திருப்பதாகவே தெரியவில்லை. மேலும் மேலும் இருவரிடமும் பகைமூட்டும் பேச்சுக்களே பேசப்பட்டு வடுகின்றன. ஆந்திரத் தலைவர்களுக்கு இத்துறையில் விரைவில் மனமாற்றம் ஏற்படும் என்று நம்புவதற்கான அறிகுறி எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை.

குறிப்பிட்ட ஒரு விவகாரத்திற்காக, அதனால் லாபநஷ்டமடைகிற இரு பிரிவினரிடத்திலும், கொந்தளிப்பு ஏற்படுவது இயற்கையானதுதான். ஆனால் சிக்கல் மூளுவதற்குக் காரணமாக இருந்த ஒரு பிரச்சினையில் முடிவேற்பட்டு விட்ட பிறகு, சீற்றம் தணியாமல் இருப்பதும், கலகம் மூட்டும் பணியைத் தொடர்ந்து செய்து வருவதும் எதற்கு என்பதைத்தான் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை, இனியாவது ஆந்திரர்கள் நேர்வழியை நாடி, நிலைமையை நன்கு உணர்ந்தவர்களாக, தமிழர்களுடைய நல்லெண்ணத்தைப்பெற பாடுபட முன் வர வேண்டுமென்பதுதான் நமது விருப்பம்—வேண்டுகோள்.

பொருமைக்கு ஆந்திரர்கள் பலியாகக்கூடாது. சென்னை நகரம் தமிழ் மாகாணத்தோடு பிணைக்கப்பட்டு விடுவதாலேயே, ஆந்திரமாகாணத்துக்குள்ள அதிகார வரம்பில் குறைவொன்றும் ஏற்பட்டுவிடாது. புதிய அரசியல் அமைப்பில், எதற்கெடுத்தாலும், டெல்லியை நோக்கித்தான், இரு மாகாணத்தவரும் தண்டனிட்டாக வேண்டும். சென்னையைத் தலை நகராகக் கொண்டில்லாத காரணத்திற்காக என்று, ஆந்திர மாகாணத்தை அலட்சியமாக நடத்தப் போவதில்லை டெல்லி. சென்னை தமிழ நாட்டோடு இருக்கிறது என்பதற்காக, ஆந்திரர்களுக்கு அளிக்காமல், எந்த விதத்தனிச் சலுகையும் தமிழர்களுக்கு அளித்து விடப்போவதில்லை டெல்லி. சென்னை நகரம் தமிழர்களிடம் இருந்தாலும் சரி, ஆந்திரர்களிடம் ருந்தாலும் சரி, டெல்லியின் ட்டளைக்குக் கீழ்ப்படிந்துதான் ஆக வேண்டும்.

சுயேச்சையற்ற, சங்கடத்தைக் கொடுக்கக்கூடிய, அதிகாரப்பிரிவிக்கு, சுயாட்சி என்ற பெயர் பொருந்தாது. ஏகாதிபத்தியம் அளித்ததும், இன்று அமுலில் இருப்பதுமான மாகாண சுயாட்சியையே மட்டமானது என்று பேசி வந்தவர்களுக்கு, இந்தச் சுயராஜ்ய அரசியல் ஏற்பாடு காலப்போக்கில் கசந்துதான் போகும். டெல்லியின் மீது சந்தேகமும் அதிருப்தியும் எதிர்காலத்தில் ஏற்படத்தான் இருக்கிறது. இந்தக் கோணத்தில் இருந்து பார்க்கின்றன பொழுது, ஆந்திரர்களும் தமிழர்களும், இனியாவது ஒற்றுமையடைவதுதான் சிறந்தது என்ற முடிவிற்கே வருவர். இரு மொழியினரும் ஒரே இனவழியில் வந்தவர்கள் என்பதற்காக மட்டும், இருசாராரிடம் ஒற்றுமை இனித் தேவைப்படுகிறது என்று வற்புறுத்தவில்லை. ஒரே நிலப்பரப்பில் வாழ்ந்தவர்கள்—வாழுகிறவர்கள்—வாழப் போகிறவர்கள் என்பதற்காக மட்டுமே, ஒற்றுமை கோரவில்லை. டெல்லியால் பாதிக்கப்படும் நன்மைகள், ஏற்படும் தீமைகள், பறிக்கப்படும் வசதிகள், அனைத்தும் இந்த இருமொழியினருக்கும் பொதுவானதோர் பிரச்னையாக இருக்கிறது என்பதற்காகத்தான், பகையை மறந்து, இருவரும் ஒன்றுபட வேண்டுமென்று விரும்புகிறோம். டெல்லியின்கட்டளைக்குக்கீழ்ப்படிய மறுக்கிறது என்பது இலகுவில் நிறைவேறிவிடக்கூடியகாரியமன்று, மிகமிகச் சிரமமான காரியமாகும் அது. இரு பிரிவினரும் ஒன்றுபட்டால்தான் அதிலுள்ள கஷ்டம் கொஞ்சம் குறைய வழியேற்படும். இருவர் மனமும் ஒன்றுபடுவதைக் கண்டாலே கூட, டெல்லி, தனது அதிகாரத்தை அமுல் நடத்துவதில் கொஞ்சம் பின் வாங்கினாலும் வாங்கும். அதனை, வட்டார மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன் படுத்திக் கொண்டு நமது மக்களின் வறுமைப்பிணியைப் போக்கலாம்.

அறிந்தோ அறியாமலோ—வேண்டுமென்றே அல்லது நிர்ப்பந்தத்தாலோ—நமது முற்போக்கை—அதாவது, நமது நிலப்பரப்பின் தொழில் வளர்ச்சியை டெல்லி கட்டுப்படுத்தித் தீரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது! டெல்லியின் பொருளியல் போக்கிலே, இந்த மறுக்க முடியாத உண்மைதான் புதைந்து கிடக்கிறது. இன்று, சாதாரணமக்களும் கண்டு கொள்ளுகிற போக்கில், இந்த உண்மை தெளிவாகத் தெரியவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். அதற்காக டெல்லியின் அந்தரங்கத்தில்அந்த உண்மை மறைந்திருக்கவில்லை என்று எவராலும் சொல்ல முடியாது.

நிலைமை, இவ்வளவு தெளிவாகஇருக்கிறபொழுது, மாகாணங்களுக்குள்ள அதிகார அந்தஸ்தின் தரமும் ஐயத்திற்கிடமில்லாமல் விளக்கமாகிவிட்ட பிறகும், ஆந்திரர்களும் தமிழர்களும், தீர்ந்துபோன சென்னை நகர் விஷயமாக, போரிட்டுக் கொண்டிருப்பதை அறவே விட்டொழிக்க வேண்டும். இந்த நற்பணிபுரிவதற்குப் பதில், அனந்தசயனம் அய்யங்கார், மறுபடியும் பழைய குப்பையைக் கிளறிக் கொண்டு இருக்கிறார். அதாவது சென்னை கார்ப்பரேஷனை இரண்டாகத் துண்டாட வேண்டுமென்றும், அந்த இரண்டிற்கும் ஆந்திர நகரசபை, தமிழா நகரசபை என்று பெயர் சூட்ட வேண்டுமென்றும் பிரலாபிக்கிறார். இதனைத்தமிழர்களும் ஆந்திரர்களும் ஏற்றுக்கொள்ளவில்லையானால், டெல்லியின் கானியாட்சிக்கு சென்னை நகரம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் ஒப்பாரி வைக்கிறார். தமிழர்களுக்குச் சென்னை நகரம் வடகோடியாகவும், ஆந்திரர்களுக்குத் தென்கோடியாகவும் இருக்கிறதாம்; இதற்குப் பரிகாரம் தேடுவதற்குத்தான் இரு நகர சபை ஏற்பாடு பற்றின அறிவுரையை அளிக்கிறாராம் அய்யங்கார்!

கிழக்குப் பஞ்சாபைத்தவிர, மற்று எல்லா மாகாணங்களுக்கும் வெகு தொலைவாக இருக்கிற டெல்லி நகரத்தை இத்துணைக் கண்டத்தின் தலைநகராக ஏற்றுக் கொள்ள அய்யங்காரின் மனம் எப்படித்தான் இடங்கொடுக்கிறதோ நாம் அறியோம். நமது நிலப்பரப்புக்கு வெகுதொலைவில் இருக்கிற டெல்லி நகரத்தின் ஆணைக்கு நாம் அடிபணிவது அர்த்தமற்றது; அனர்த்தத்தை நமக்களிப்பது என்ற நல்லெண்ணத்தை அய்யங்கார் கொள்வது நல்லது. இதைவிட்டு,விட்டு சென்னையைத் துண்டாடமட்டும், இந்தத் 'தொலைவு' வாதம் பேசுவது பொருத்தமானதாகாது. அய்யங்காருக்கு, வேறு பணி—முக்கியமான பணி ஒன்று இருக்கிறது அதனை மேற்கொள்ளட்டும் உடனடியாக, ராயலசீமாவின் உள்ளத்தைப் பிரதிபலித்துக் கூறும் தகுதியுடைய மகா சபை ஆந்திர மாகாண ஏற்பாட்டையேஎதிர்த்திருக்கிறது. கடற் கரையை ஒட்டியுள்ள ஆந்திரர்களை நம்ப ராயலசீமாவில் வாழும் தெலுங்கு மொழியினர் மறுக்கிறார்கள என்று அந்தச் சபை அறிவித்திருக்கிறது. ஆந்திர மாகாண ஏற்பாட்டிற்கு மேலும் சிறிது காலம் செல்லவேண்டுமென்று வேறு எடுத்துக் காட்டியுள்ளது. ராயல சீமாவைச் சேர்ந்தவர்தான், 'தொலைவு' வாதம் பேசும் அய்யங்கார்! எனவே, இந்த அபத்தப்பேச்சை நிறுத்திக்கொண்டு, ராயல சீமா மக்களை ஆந்திரமாகாண ஏற்பாட்டை எதிர்ப்பதிலிருந்து தடுத்து நிறுத்தும் பணியில் ஈடுபட வேண்டுகிறோம். அது ஒன்றுதான் தமிழர் ஆந்திரர் இரு பிரிவினரையும் டெல்லியின் சர்வாதிகாரத்திலிருந்து காப்பாற்ற உதவக்கூடும். பொருமை புயலில் சிக்கிச் சிந்தனை சிதைவுறாமல்,இனியாவது ஆந்திரர்கள் நல்லறிவு பெறுவார்களாக.

நாட்டுத் தலைவர்கள் பெயர்களை விளம்பரத்துக்குப் பயன்படுத்தக் கூடாதாம்

சட்டம் செய்ய மத்திய அரசியலார் யோசனை

காந்தியார் போன்ற பெரிய தேசியத்தலைவர்களின் படங்களையோ பெயர்களையோ வியாபாரிகளும், வர்த்தக நிலையங்களும் தங்களுடைய வியாபாரத்துக்குரிய க உபயோகப்படுத்தக் கூடாது என்பதற்காக ஒரு சட்டம்செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள் மத்திய அரசியலார்.

நாட்டுத்தலைவர்களின் பெயரைத் தனிப்பட்ட மனிதர்களும் ஸ்தாபனங்களும் தம்முடைய சுயநலத்துக்குப் பயன் படுத்திக் கொள்வதைக் கண்டிக்க வேண்டியது தான் முறை. ஆனால் இங்ஙனம் கண்டிக்கவும், அதனைத் தடை செய்யவும் விரும்புவோர் முதலில் ஒரு விஷயத்தை நன்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதாவது, தனிப்பட்டவர்கள் தம்முடைய சுயநலத்துக்காக நாட்டுத்தலைவர்களுடைய பெயர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு இந்நாட்டு அரசியல் தலைவர்கள் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இந்நாட்டு அரசியலே ஓர் அதிசய விசித்திரமான அரசியல். வர்த்தகர்கள் விளம்பரத்தால் தமது வர்த்தகத்தை வளர்க்க விரும்புவது போல், அரசியல்கூட்டக்காரர்கள் இவர் எடுத்ததற்கெல்லாம் தலைவர்கள் பெயர், தேசியக் கொடி, ஆகியவற்றை விளம்பரப்படுத்துவதன் மூலமே கட்சியை வளர்த்துப் பழக்கப்பட்டு விட்டார்கள். கட்சியின் குறிக்கோளைப் பரப்புவதை விட விளம்பரமே பெரிதெனக் கருதி அதற்கு முக்கியத்வம் கொடுத்து அரசியல் கட்சியை மக்கள் ஒரு மதமாகக்கருதிப் பின்பற்றும் படி செய்து விட்டனர். இதன் விளைவாக நாட்டு மக்களின் நல்லறிவு வளர்ச்சிகுன்றி, மூட நம்பிக்கை வளரலாயிற்று. இந்த மூட நம்பிக்கையைத்தான் வியாபாரிகள் இன்று தமக்குச்சாதகமாகப் பயன் படுத்திக்கொள்ளுகின்றனர். இதற்காக வியாபாரிகளைக் குறைகூறி என்ன பயன்? அன்று அரசியல் வாதிகள் செய்த பணியை இன்று வியாபாரிகளும் சுயநல வாதிகளும் செய்கின்றனர்! அரசியல் வாதிகள் அன்று வழி அமைத்தனர் இன்று சுயநலவாதிகள் அவ்வழி நடக்கின்றனர். இவ்வளவு தான் வித்தியாசம்.

வர்த்தகப் போராட்டம்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்கெனவே 'பிரகடனஞ் செய்யப்படா'ப் போராட்டம் நடைபெற்று வருகிறது. சணலையும் பருத்தியையும் பாகிஸ்தானிடமிருந்து வாங்க இந்தியா மறுத்துவிட்டது. பாகிஸ்தான் தனது ரூபாயின் மதிப்பைக் குறைத்துக் கொள்ளச் சம்மதிக்கவில்லையாகையால் இவ்விரு பொருள்களுடைய விலை ஏற்றமாயிருக்கிறதென்பது இந்தியாவின் வாதம். தான் அனுப்பும் பருத்திக்கும் 30 சதவிகித அதிக விலையை பாகிஸ்தான் இந்தியாவிடமிருந்து எதிர் பார்க்க முடியாது. எனவே விலையைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென இந்தியா கோருவதில் நியாயமிருக்கிறது; பாகிஸ்தானும் இதற்கு இணங்குவதில் சம்மதிப்பதே சாலப் பொருத்தமுடைத்தாகும். இந்திய ரூபாயின் மதிப்பைக் குறைத்ததால் வந்துள்ள பிரச்னைகளுக்கு ஒரு திட்டத்திலமைந்த உரிய முடிவு காண இருநாட்டு சர்க்கார்களும் மறுத்து வருவதால் பாகிஸ்தான் விவசாயிகளுடையவும் இந்தியத் தொழிலாளர்களுடையவும் நலத்துக்குத்தீங்கு நேருவது காணும். தங்களது பருத்திக்கும் சணலுக்கும் பல்லாண்டு காலமாக இருந்து வந்த 'மார்க்கெட்' மறுக்கப்படுவது கண்டு பாகிஸ்தான் விவசாயிகள் அயருகின்றனர்; போதுமான பருத்தி, சணல் 'ஸ்டாக்' இல்லாமையால், பருத்தி-சணல் ஆலைகள் ஆள் குறைப்பு செய்துவிடுவதால் இந்தியப் பருத்தி-சணல் நெசவுத் தொழிலாளர்கள் சொல்லொணப்படுகின்றனர். இதுபோன்ற மோசமான, மன்னிக்க முடியாத குற்றங்களுக்கெல்லாம் பொறுப்பாளிகள் இரு பால் இருதரப்பிலுமுள்ள அரசியல்வாதிகளே யாவர்.

இருநாட்டுக்கிடையேயும் இப்படி எழுந்துள்ள வர்த்தகப் போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொணர இருநாட்டவரும் முயலாத பட்சத்தில், அளவற்ற தீமையே இரு தரப்பிலும் விளையும். பாகிஸ்தான் தருவதாக வாக்களித்த 1,75,000 டன் கோதுமையையும் இந்தியா ஏற்க மறுத்துவிட்டதென்று கராச்சி செய்தியொன்று கூறுகிறது. இப்போது இந்தியா வாங்கும் அமெரிக்கக்கோதுமைசரசமான விலைக்குக் கிடைக்குமென்றும் கூறப்படுகிறது. இத்தகவல் எவ்வளவு தூரம் உண்மையென்பது நமக்குத் தெரியவில்லை. இது உண்மையானால், 'கோதுமை கோதுமை' யென்று கூப்பாடு போடும் இலட்சக்கணக்கான இந்திய மக்களுக்கு இந்திய சர்க்கார் விளக்கம் தந்தே ஆகவேண்டும். பாகிஸ்தானிடமிருந்து சரசமான விலைக்குக் கோதுமை கிடைக்கையில், அமெரிக்காவிலிருந்தும் ஆஸ்ட்ரேலியாவிலிருந்தும் கோதுமை வாங்குவதில் அர்த்தமோ அறிவுடைமையோ இருக்கமுடியுமா? இத்தகைய வேலை நிறுத்த வர்த்தகப் போராட்டத்தை வளர விடுவது பெருங்குற்றமாகும்.

—'ராடிகல் ஹ்யூமனிஸ்ட்'

இறந்த காலப்பெருமை!

"இந்நாட்டில் முதன் முதலில் சோஷலிஸ, கம்யூனிஸக் கொள்கைகளைப் பிரசாரம் செய்தவர் பண்டித நேருவே ஆவார். நமது பிரதம மந்திரியைக் காட்டிலும் பெரிய சோஷலிஸ்டு ஒருவர் இருக்கமுடியாது. சோஷலிஸ்ட் கட்சியினர் ஒரு காலத்தில் பண்டித நேருவைத் தங்கள் தலைவராகவேக் கொண்டாடினர்"

காமராஜர்

சென்னை 14-11-49

ஊக்கமின்றேல் உற்பத்தியில்லை

தொழில் வளர்ச்சிக்குத் தக்க பாதுகாப்பு தேவை

ஆவன செய்ய ஆட்சிமுறை மாறவேண்டும்

"நம் மாகாணத்தில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக கைத்தறி நெசவுதான் முக்கியமான பெரிய கைத்தொழில். நம் மாகாணத்தில் மட்டும் 5 லட்சம் கைத்தறிகள் வேலை செய்கின்றன. ஆனால், இவ்விரு முக்கிய தொழில்களும் எப்படிச் செழித்திருக்க வேண்டுமோ அப்படி யில்லை. இவ்விருவகைத் தொழிலாளருக்கும் ஜீவனத்திற்குப் போதிய ஊதியம் கூட கிடைக்கவில்லை. எனவே, இந்தத் தொழிலாளர்கள் பரம்பரையாகச் செய்து வந்தத் தொழிலை விட்டு விட்டு, அதிக வருவாய் கிடைக்கும் தொழிற்சாலைகளில் வேலைக்குப்போய் விடுகிறார்கள். இந்தப் போக்கு விவசாயத்தையும் கைத்தொழில் போன்ற குடிசைத் தொழில்களையும் பேணி வளர்க்க வேண்டுமென்ற சர்க்கார் கொள்கைக்கு மாறானது. எனவே, கைத்தறித் தொழிலாளரை அவர்களுடைய தொழிலிலேயே நீடித்திருக்கச் செய்யும் படியாக ஊக்கமளிக்க வேண்டும்"

என்று சென்னை முதலமைச்சர் தோழர் குமாரசாமி ராஜா அவர்கள் சென்னையில் நடைபெற்ற மாகாண கைத்தொழில் பாதுகாப்பு மாநாட்டில் பேசியிருக்கிறார்.

அமைச்சரின் பேச்சில் அடங்கியுள்ள கருத்துக்கள் திராவிட நாட்டவர் ஊன்றி கவனிக்க வேண்டியவை. இம் மாகாணத்தின் முக்கியமான கைத்தொழில்கள் வளர்ச்சியடையாமல் நாளுக்கு நாள் தேய்ந்து வருகிறது என்பதற்கு அமைச்சரின் பேச்சுகளே போதிய சான்றாகும். இங்ஙனம் இம்மாகாணத்தின் முக்கியமான கைத்தொழில்கள் தேய்வடைவதற்குக் காரணம், அத்தொழிலாளருக்குப்போதிய ஊக்கமின்மையே என்பதை அவர் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். பொதுவாகத் தொழில்கள் நசித்து, தொழிலாளர் துயருறக் காரணமாயிருப்பது அத்தொழிலுக்கு வேண்டிய வசதிகள் குறைவாயிருப்பதேயாகும். ஆனால், இம்மாகாண நிலை அதுவல்ல. இங்கு தொழிலுக்கு வேண்டிய வளங்கள் அனைத்தும் இருக்கின்றன. ஆனால் அத்தொழில்களைச் செய்வோரின் உள்ளத்தில் ஊக்கமில்லை. இதனால் வெறுப்பு வளருகிறது, வேதனை அதிகரிக்கிறது. வேறு வேலையைப் பார்ப்போம் என்று நினைக்கவேண்டிய நிலைமை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

எனவே, இம்மாகாணத்தின் இன்றியமையாக் கைத்தொழில்கள் இங்ஙனம் சீரழியாமல் காப்பாற்றப்பட வேண்டுமானால் தொழிலாளர்க்கு ஊக்கம் ஏற்படும்வண்ணம் செய்தல் வேண்டும். அதனை எப்படிச் செய்வது? இதுதான் சிந்திக்கவேண்டிய விஷயம்

ஊக்கம் குறையக் காரணம் உழைப்பாளியின் உழைப்புக்கேற்ற பலன் கிடைக்காததேயாகும். உழைப்பாளிகளின் உழைப்புக்கேற்ற பலன் கிடைக்காததற்குக் காரணம் இம்மாகாண கைத்தொழில்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாமையேயாகும். குறிப்பாக கைத்தறித் தொழிலை எடுத்துக்கொண்டால் இத்தொழில் நசித்துவருவதற்குக் காரணம், வடநாட்டு ஆலைகளுடன் இந்நாட்டுக் கைத்தொழில்கள் போட்டிப்போட முடியாமையேயாகும். பம்பாய் ஆமதாபாத் போன்ற வடநாட்டு ஆலைகளில் உற்பத்தியாகும் துணிகளுக்குச் சென்னை மாகாணம் சரியானதோர் மார்க்கெட்டாக இருந்து வருகிறது. இந்த நிலை மாறாத வரை இந்நாட்டுக் கைத்தறிகளுக்கு ஆதரவு கிட்டும் என்று நினைப்பது பேதமை. இப்படிப்பட்ட நிலை மாற வேண்டுமானால், வடநாட்டுத் துணிகள் இங்கு அனுப்பப்படுவது கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதற்கு ஆட்சியாளர் வழி வகை செய்ய தவரார். அல்லது, வழிவகை செய்யும் சக்திவாய்ந்த ஆட்சிமுறை திராவிடத்துக்கு ஏற்படாதவரை எத்தகைய உருப்படியான பலனையும் காண முடியாது.

யார் அந்த அறுவர்?

"தோழர் நேரு உலகப் பெருமக்கள் எழுவருள் ஒருவராவார்"

—லூயி ஜான்சன்.

'ஏனைய அந்த அறுவர் நமக்குள் யார் யார்' என்பதே இன்று இந்தியக் காங்கிரஸ் தலைவர்களின் பிரச்சினையாகும்.

—'சங்கர்ஸ் வீக்லி'

'மக்கள் நேரு சர்க்காரை விரும்பவில்லை'

காரணங் காட்டுகிறார் காங்கிரஸ் பத்திரிகாசிரியர்

—(0)—

'லஞ்ச ஊழல் மலிந்தது; மக்கள் நிலை மங்கிற்று'

'ஆட்சிபீடத்துக்கெதிராய் :: :: அதிருப்திக்கனல் சூழ்கிறது'

பம்பாயினின்றும் வெளிவரும் ஆங்கில வார இதழாகிய 'பிளிட்ஸ்' நவம்பர் 12-ந் தேதி வெளியீட்டில் காலாசுப்ப ராவ் எழுதியுள்ள கட்டுரையொன்றின் குறிப்புகள் கீழே தரப்படுகின்றன :—

"பிரிட்டிஷார் வெளியேறியதை யொட்டி சிறையிலிருந்த காங்கிரஸ் தலைவர்கள் மந்திரி பீடமேறினர். இம் மாற்றம் சிலருக்கு ஒத்துக்கொண்டது; பலருக்கு ஆவ்வில்லை.

நேரு ஒரு சோஷலிஸ்ட்; ஆனால் அவர் சர்க்காரோ சோஷலிஸ்டுகளுக்கு அனுதாபம் காட்டவேயில்லை. நேரு வகுப்பு வெறியர்ல்லர்தான்; ஆனால் காங்கிரஸ் மந்திரிகள் சிலர் வெளிப்படையாக வகுப்புவெறியோடு நடந்துகொள்கின்றனர். நேரு கள்ள மார்க்கெட்காரர்களை வெறுக்கிறார்; தண்டிக்கிறார்; ஆனால் நாடு முழுதும் கள்ள மார்க்கெட் நடமாடுகிறது. நிர்வாகம் படைத்தோருடையவும், அதிகாரத்திலுள்ளோர்களுடையவும் அனுதாபம், விட்டுக் கொடுக்கும் மனோபாவம் — இவற்றின் பெயரில் கள்ளமார்க்கெட்டர் காலங்கழித்துவருகின்றனர். 'மகாத்மா'வின் உருவப் படங்களை ரோஜா மாலைகள் அணி செய்தாலும், நறுமணமிக்க தூபதீபங்கள் அவற்றின் முன் போடப்பட்டாலும் காங்கிரஸ் அதிகார வர்க்கத்திடமிருந்து 'மகாத்மா' கொள்கை மீதிருந்த பற்றுதலும் பிரீதியும் மறைந்துவிட்டது.

காங்கிரஸ் கொள்கைகளுக்குத் துரோகம் விளைத்த தலைவர்களெல்லாம் காங்கிரஸ் பெயரில் அரசாள வந்துவிட்டனர். மாபெரும் பொருளாதாரப் பிரச்சினைகளை அவர்கள் தீர்த்து வைத்தார்களில்லை. இரண்டாண்டுகட்கு முன்பிருந்ததை விட இப்பொழுது மக்கள் நிலை படுமோசமாகிவிட்டது. லஞ்ச ஊழல், சுற்றத்தார் பட்சபாதம் தலைவிரித்தாடுகின்றன.

மக்களிடையே குடிகொண்டிருந்த நம்பிக்கை பறந்தோடிப் போயிற்று; காங்கிரஸிடம் அவர்களுக்கிருந்த மரியாதை நாளுக்கு நாள் குறைந்துவருகிறது.

ஆட்சிப்பீடத்தை எதிர்த்து அதிருப்தி மனநிலையும், புரட்சிக் கனலும் நாள்தோறும் வளர்ந்து வருகின்றன.

மக்களுக்கு நேரு சர்க்கார் மீது விருப்பமில்லை; ஆனால் அவர்கள் வேறு பிரதமரையும் விரும்பவில்லை. இந்த நிலையில் பண்டித நேரு செய்யவேண்டிய சரியான காரியமென்னவென்றால், காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து சுயநல—சூழ்ச்சி—சண்டைக்காரர்களை விரட்டியடித்துவிட்டு, அரசியல் நிர்வாகத்தை வெளியார்களிடமிருந்து காங்கிரஸ் நிர்வாகத்தை விடுவிப்பதேயாகும்.

அறிவுபரப்பும் அரும்பணியே கழகத்தின் குறிக்கோள்

கம்பத்தில் தோழர் துரைராசன்

[கம்பத்தில் தி. மு. க. துவக்க விழாவில் தோழர் இரா. துரைராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு]

கம்பம், நவ. 10—

முன்னேற்ற துவக்க விழாவினை உங்களூரில் ஆற்றும் பணி எனக்கு அளித்தமைக்கு அகமகிழ்கின்றேன். ஆள்வோரும் கண்டு ஆயாசப்படும் அளவிற்கு நாம் நமது முன்னேற் திராவிட கழகத்தைப் பச்சை இரத்தம் பரிமாறி உருவாக்கினோம் என்பதை மறைத்தாலும், மறைக்கலாம், யாரும் மறுத்துவிட முடியாது. தலமுத்து நடராஜனின் பிணங்களின் மேல் நடந்து, தொங்கிய மாவீரன் வேலாயுதத்தை நிமிர்ந்து நோக்கி; மதுரையிலே கொளுத்தப்பட்ட மாநாட்டுப் பந்தலின் தீச்சுவாலையிலே வெந்து, சேலத்திலே பறிக்கப்பட்ட கண்களையும், கால்களையும் கடந்து, குடந்தையிலே கொட்டிய குருதியின் வயப்பட்டு, ஆக இவ்வளவு தியாகங்களை நம்மிடம் இளைஞர் அணிவகுப்பிடம்-அண்ணாத்துரையின் அருந்தொண்டர்களிடம் கண்ட பின்னர் தான், பெரியார் கூறுகிறார், நாமெல்லாம் சுயநலமிகள், துரோகிகள், சதிகாரர்கள் என்று. இருண்டவாழ்வில்ஒளி என்று ஏற்படுமோ என கவலையோடு இருந்த நம்மிடம் விடிவெள்ளி தோன்றியது. அதுதான் திராவிட முன்னேற்றக்கழகம்.

திராவிடமுன்னேற்றக் கழகம் தோன்றிய இந்த நேரத்திலே, சொந்த நாட்டின், இன்பத் திராவிடத்தின் நிலை கண்டு கலங்க வேண்டிய அளவுக்கு ஆட்சி பீடம் அடக்கு முறை கொண்டு மண்டலம் ஆண்டு வருகிறது. அடிமை முறிச்சீட்டு நமது திராவிடத்தின் எதிர்காலத்தில், எழ்மையில் சூழ்ந்த டெல்லிமாநகரில் அரசியல் ஆக்கமன்றத்தின் திட்டங்களாக உருவாகி வருவதைக் காண்கிறோம். அண்ணாவை அடக்கு முறை கூர்வாள் கொண்டு குத்த ஆள்வோர் நடவடிக்கை அழைப்பினை கண்டு கலங்குகின்றோம். நமது கழக நூல்கள் திராவிடர் நிலை ஆகியவையும் தாணி ஆள்வோரால் தடைசெய்யப்பட்டுவிட்டன கண்டு துடிக்கின்றோம். அறிவுபரப்பும் அரும்பணி. பாசிசத்தை முறிக்கும் புனித பணி புரிந்துகொண்டு வருகிறோம். நமது பணி, என்றும் விட இன்று அதிக அளவு நமது நாட்டுக்குத் தேவைபடுகின்றது. சொந்த நாட்டிலே வேலாயுதம் தொங்க, கடல் கடந்து வாழச்சென்ற நாட்டிலே கணபதி தொங்க, இடையிலே துயர்தாங்கி நாம் ஏங்க, நாட்டிலே கள்ளமார்க்கெட், லஞ்சம் இவை ஓங்க, வாழ்விலே இன்பத் தென்றல் போய், வேதனைப்புயல் இன்று வீசிக்கொண்டிருக்கக் காண்கிறோம். அதேபோது மன்பதை சுற்றும் மாபெரும் பணியிலே ஈடுபட்டுள்ள நமது மண்டலம் ஆளும் மாவீரர் பண்டிதரைக் காண்கிறோம். அங்குநாட்டின் செல்வம், விருந்து, வேடிக்கைகளுக்கு, விஜயலக்ஷ்மியாரின் பவனிக்கு, படாடோபத்திற்குப் பலியாகின்ற நிலையினையும், இங்கு கடலூர் சிறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு பலியான கொண்டப்பா, இராமய்யா இருவரின் பிணங்களையும் பார்க்கின்றோம்.

இன்றைய ஆட்சி ஏழைகளைச் சுரண்டி ஏற்றம் கொள்ளும் எத்தர் கூட்டத்திற்கு, பணமூட்டைகளுக்கு முன்னேறும் பின்னேயாக முகாம் அமைத்துத்தருவதாக மாறிவிட்டது. அமித லாப வரியினை பணமூட்டைகளிடமிருந்ததை நீக்கிவிட்டு, கார்டு, கால் விலையினைக் கூட்டி பாட்டாளி மக்களுக்கு வாட்டத்தையும், வறுமையும் இன்றைய ஆட்சியின் அன்றாட அலுவல்களாக்காட்சி அளிக்கின்றன. உணவை, உணவு உற்பத்தியை அதிகரிக்க வாயளவில் பேசிக்கொண்டு, இராமபாதசாசர் திட்டத்தை நிறைவேற்ற மனமில்லாமல் பணமில்லை என்ற பண்பாடிக்கொண்டு, அதேபோது காஷ்மீர் களத்திலே போர் பரணி பாடிக்கொண்டு, பணத்தை வாரி, வாரி இறைத்து ஏழை மக்களை வாட்டி வதைப்பது இன்றைய ஆட்சிப்பீடத்திற்குத் திட்டமாகிவிட்டது. மக்களின் அன்றாட அடிப்படை பிரச்சினைகளான, உயிர்ப்பிரச்சினைகளான உணவு, உடை உறைவிடம், கல்வி, சுகாதாரம் இவற்றையல்ல இன்றைய ஆள்வோர் அதிகரிப்பது. போலீஸ்படையை அதிகரிப்பது ஹோம்கார்டுகளை அமைப்பது பட்டாளம் கூட்டுவது, பொது அமைதி பாதுகாப்பு சட்டத்தைப் புதுப்பித்து, எழுத்துரிமை பேச்சுரிமை இவற்றை அடியோடு பறிப்பது. ஆக இன்றைய இந்திய உபகண்டம் ஜார்காலத்து ரஷ்யா, லூயிகாலத்துபிரான்ஸ் சார்லஸ் காலத்து இங்கிலாந்து, சியாங் காலத்து சைனா போன்று இருக்கிறது.

நமது இன்பத் திராவிடத்திலே, செளகார் பேட்டை, டால்மியா நகர், ராம்லிநகர் இவைகள் அடிமைச்சின்னத்தின், பண மூட்டைகளின், வடநாட்டு 'சேட்டு'களின் படையெடுப்பின், பொருளாதார முற்றுகையின் கோட்டை கொத்தளங்கள்தான் கப்பல் ஓட்டும் தொழில் உரிமை வ.வு.சி. பரம்பரையினரான நமக்கல்ல; டாட்டா, பிர்லா, பாபரையினரான வால்சந்த் ஹீராசந்த்களுக்கு. இந்தியாவின் மான்செஸ்டர் என்று கருதப்படும் நகர், சென்னையல்ல, பம்பாய். ஆகவே நமது திராவிடம் இனி பட்டிக்காடு; வடநாடு பட்டினம். இங்கு மூலப் பொருள்கள் அங்கு உற்பத்திப் பொருள்கள். இங்கு விவசாயம், அங்கு வடநாட்டில் தொழிலரசுகள். இந்த நிலைக்கு மத்திய சர்க்கார் ஒரு தூண்போல் இருந்து வடநாட்டுக்கு வாய்ப்பு அளித்து வருகின்றது. இதனை நாங்கள் புள்ளிவிவரத்தின் மீது கூறுகின்றோம். அண்மையில் ஓடும் இரயில்வே, என்ஜின்களின் தொழிற்சாலையினை இந்தியாவில் அமைக்க முயன்ற மத்திய ஆட்சி சென்னையை தேர்ந்தெடுக்கவில்லை. முன்னரே ஆலை அரசு அமைத்துள்ள மேற்கு வங்காளத்தைத் தேர்ந்தெடுத்து, புதிய விமான தளங்கள் அமைக்க திட்டமிட்டகால வடநாட்டில் நூற்றுக்கணக்கில் விமான தளங்கள். திராவிடத்தில் ஓரிரு இடங்கள்தான். ஆகவே தொழிலரசு அமைக்க, வறுமை போக்க, மலேயாவில் மாளும் கணபதிகளை மீட்க நட்லாட்சி நிறுவ திராவிடநாடு தனியே பிரிதல் வேண்டும். அதற்கான விடுதலைப் போரினை திராவிட முன்னேற்றக் கழகத்தினரான நாங்கள் தொடுக்குங்கால், பொது மக்களான நீங்கள் தோளோடு தோள் இணைந்து ஒத்துழைத்து ஆதரவு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்று கூறி, இன்னும் விரிவான முறையில் ஆள்வோரின் திட்டங்களையும், அவற்றின் அவசியங்களையும் விளக்கி கூறி, பொருளாதார சுரண்டலைப் பிரித்துக் காட்டி, சமுதாய பழமையினையும் அவற்றை முறியடிக்கும் முகாம் முன்னேற்றக் கழகந்தான் என்று விரிவுரை கூறி தமது சொற்பொழிவினை முடித்தார். கூட்ட முடிவில் மாற்றுக் கட்சி தோழர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நேரிய முறையில் விடையளிக்கப்பட்டு இனிதே கூட்டம் முடிவுற்றது.

நாங்கள் அழிந்தாலும் எங்கள் கொள்கையை அழிக்கமுடியாது!

திருத்தங்கலில் சிவசாமி—தங்கப்பழம் பேச்சு

திருத்தங்கல், நவ. 14—

13—11—49 ஞாயிறன்று இரவு 8 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. சோழவந்தான் தோழர் ஆவுடையப்பன் அவர்கள் தலைமைவகித்துப் பேசியதன் சுருக்கம்:-திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று தான் நாட்டிற்கு நல்ல பணியாற்ற முடியும். ஆயிரமாயிரம் பேர் அங்கத்தினர்களாகச் சேர்ந்து எங்கள் அணிவகுப்பைப் பலப்படுத்துங்கள் என்று கூறினார்.

எம். எஸ். சிவசாமி

அடுத்து, தூத்துக்குடி தோழர் எம். எஸ். சிவசாமி பேசியதாவது ;—

இளைஞர்களாகிய நாங்கள் சேர்ந்து பணியாற்றும் இந்த இயக்கத்தைக் கண்டு நாட்டில பலர் பலவிதமாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். இவர்களால் உருப்படியான காரியங்கள் சாதிக்க முடியுமா, என்று கேட்கிறார்கள். அகில உலக அரசியல் வரலாற்றிலும் உலகைத் திருத்திய உத்தமர்கள், நாட்டைச் சீர்திருத்திய நல்லவர்கள் அனைவர்களும் இளைஞர்கள், வாலிபர்கள் தான. திராவிட முன்னேற்றக் கழகத்தில்ஆயிரமாயிரம் இளைஞர்கள் கூடியிருப்பது எதிர் காலத்தில் இந்த நாட்டுக்கு வரப்போகும்நல்லகாலத்தைத் தான் குறிக்கிறது என்று கூறி, நேருவின் அமெரிக்கப் பயணத்தின் அந்தரங்கத்தைக் கண்டித்து, கடைசியாக கம்பனுக்கு விழாக்கொண்டாடும் சென்னைமாகாணமந்திரிகளின் கேலிக்கூத்தை விளக்கும் பொருட்டு கம்பராமாயணத்திலிருந்தும் சில ஆபாசக் கட்டங்களைஎடுத்துக்கூறிபேச்சை முடித்தார்.

இரா. சு. தங்கப்பழம்

கடைசியாக தோழர் இரா. சு. தங்கப்பழம் பேசியதாவது:—

தோழர்களே! பெரியாருக்கும் எங்களுக்கும் பிரிவு ஏற்பட்டதைப் பயன்படுத்தி மாற்றுக் கட்சியினர் எவரும் கும்மாளம் போடத் தேவையில்லை. அரசியலில் அபிப்பிராயபேதம் சகஜம. காங்கிரஸ் கட்சியிலிருந்து அபிப்பிராயபேதப்பட்டு பெரியார் வெளியேறியதால்தான் திராவிடர் கழகத்தையும் திராவிடநாட்டுத் திட்டத்தையும் காணமுடிந்தது.

காங்கிரசோடு கருத்து மாறுபட்டு ஜனாப் ஜின்னா வெளியேறியதால்தான்,பாகிஸ்தான் காண முடிந்தது. காந்தியாரோடு கருத்து வேறுபட்டதால்தான், சுபாஸ்போஸ் உலகமறிந்த ஒரு வீரனாகப் போற்றப்பட முடிந்தது. அதுபோல் பெரியாரைவிட்டு நாங்கள் பிரிந்தால், கொஞ்சம் அதிகமாகவே எங்கள் கொள்கையைப் பரப்புவோமே யொழிய வேறொன்றுமில்லை. எங்களையும் எங்கள் கொள்கையையும் ஒழித்துக்கட்ட காங்கிரஸ் சர்க்கார் தன்னுடைய கடைசி ஆயுதம்வரை பிரயோகித்து வருகிறது. வழக்குமேல் வழக்கு தொடர்ந்தாலும் எங்களைத்தான் ஒழிக்க முடியுமேயொழிய, எங்கள் கொள்கைகளை எவரும் அழிக்க முடியாது. பேசாதே என்று எங்கள்நாக்கை அறுத்தால், பேனாவைப் பிடித்து எழுதுவோம்எழுதாதேஎன்று எங்கள் பத்திரிகைகளைப் பறித்தால், தெருவெல்லாம் சுவரெல்லாம் எங்கள் கைகளாலே எழுதிப்போடுவோம். கட்டைவிரல்களை வெட்டி எடுத்துவிட்டால், கால் விரல்களாலே எழுதுவோம். இந்த அளவுக்குச் சர்க்கார் "ஜெர்மன்" பிரயாணம் செய்வதற்குள் எதிர்கால இளைஞர் உலகம் எங்கள அடிச்சுவடைப் பின்பற்றி ஆட்சியாளரின் பிடரியைப் பிடித்து ஆட்டி என்ன சேதி என்று கேட்க ஆரம்பித்து விடும்.

சரிந்து வரும் காங்கிரசை சரிக்கட்ட காமராஜர்கள் எந்த அளவு சண்டமாருத பிரச்சாரம் செய்தாலும் அது நிலைக்காது என்று, காமராஜரின் முரணான பேச்சுகளுக்கு மறுப்பு கூறி, தனி அரசு திட்டத்தை விளக்கி, திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றால்தான், இனி நாட்டில் நல்ல பல காரியங்கள் ஆற்ற முடியும் என்று எடுத்துக்கூறிவிட்டு, கேள்விகள் சிலவற்றிற்குப் பதில் கூறிவிட்டு பேச்சை முடித்தார். இரவு 11 மணிக்குக கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

கைத்தறி நெசவுத் - - தொழிலுக்கு உதவி

சென்னை சர்க்கார் இந்திய சர்க்காருக்குவிடுத்துள்ளவேண்டுகோளொன்றில் கைத்தறி நெசவுத் தொழில் முன்னேற்ற சம்பந்தமாக வெளிநாடுகளுடன் உறவு ஏற்படுத்தித் தருமாறு கேட்டிருக்கிறார்கள்... சென்னை மாகாணத்தில் கைத்தறி நெசவுத் துணிகள் பெருவாரியாகத் தயாராக வாய்ப்பிருப்பதால், வெளிநாடுகளுடன் வியாபாரத் தொடர்புகள் வைத்துக் கொள்ளும் வகையில் அயல்நாடுகளில் இந்திய அரசு பிரதிநிதிகளாக இருப்போரிடம் தக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றனராம் சென்னை சர்க்கார்

உயர்தர நீதி இலாகா

மாகாண உயர்தர நீதி இலாகா (சர்வீஸ்) ஒன்றினை சென்னை சர்க்கார் விரைவில் அமைக்க போவதாக,சட்டமந்திரி தோழர் மாதவமேனன் மேல்சபையில் 14-ந்தேதியன்று குறிப்பிட்டார்.

கேலிக் கூத்து!

"மதுவிலக்கு அமுலுக்கு வந்து சுமார் ஒரு வருஷ காலமான பிறகு, இப்போது இவ்வித (மதுவிலக்கு) பிரசாரம் கேலிக் கூத்தாக இருக்குமே யொழிய, எவ்வித நற்பயனும் ஏற்படாது. மறந்து போன பழக்கத்தை ஞாபகப்படுத்தி, கள்ளச் சாராயத்துக்கு விளம்பரம்தேடிக் கொடுப்பதுதான் இதனால் ஏற்படக்கூடிய பயன். ஆகையால், இப்போது பிரசாரர்கள் நியமிப்பது அனாவசியம் மட்டுமல்ல; கெடுதிக்கும் இடமாகும்."

—"தினமணி"

11—11—49

நாட்டு மருத்துவத்திற்கு ஆட்சியாளர் ஆதரவு

நாட்டு வைத்திய முறைக்கு ஊக்கமளித்து மேற்கொண்டு ஆக்க வேலைகள் செய்யப்போவதாக அண்மையில் சென்னை சட்டசபையில் சுகாதார அமைச்சர் டாக்டர் டி. எஸ். எஸ். இராசன் அவர்கள் தெரிவித்தார். ஒருகேள்விக்குப் பதிலளிக்கும் போது கிராம வைத்திய திட்டப்படி 1000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நாட்டு வைத்தியர் நியமிக்கப்படுவார் என்று தெரிவித்தார்.

அரசியலார் இங்ஙனம் நாட்டு மருத்துவத்துக்கு ஆக்கமளிக்க முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறோம். பொதுவாக நம் நாட்டில் கிராமங்களே அதிகம். கிராம மக்கள் தமக்கு ஏற்படும் நோய்களை போக்கிக்கொள்ள வேண்டுமானால், அவர்களுக்குத் தக்க வைத்திய வசதிகள் கிடைப்பதில்லை. அடுத்துள்ள நகரங்களைத் தேடிச் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அப்படி நகரங்களுக்குச் சென்றாலும் அங்கு ஆங்கில மருத்துவமேபெரிதும் மதிக்கப்படுவதால் இவர்களும் அந்த வைத்திய முறைகளுக்காக ஏராளமான பணம் செலவிட வேண்டியிருக்கிறது. பணக்காரர்களாக இருந்தால் அல்லது ஆங்கில வைத்தியத்தால் அடையும் நன்மைகளை அடைய முடிவதில்லை. இப்படிப்பட்ட நிலை மாற வேண்டும். சொற்பச் செலவில் சாதாரண நோய்களைப் போக்கிக் கொள்ளும்வசதி கிராமமக்களுக்குக் கிடைக்கவேண்டும். இதற்கு ஒரே வொருவழிதான் உண்டு அதுதான் நாட்டு வைத்தியமுறை. நமிந்தமுறை சிக்கனமானது,அனுபவத்துக்குஏற்றது, பயனுள்ளது. இப்படிப்பட்ட ஒரு நல்ல முறைக்கு அரசியலார் ஆக்கம்தர முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியே எனினும் அரசியலார் பேச்சளவோடு நில்லாமல் செயலளவிலும் இதனைச் செய்ய முன் வரும்போதுதான் மக்களுடைய பாராட்டுதலுக்குரியாராவர். படித்துப் பட்டம் பெற்றிருக்கும் ஏராளமான இந்திய மருத்துவர்களுக்கும் அப்பொழுதுதான் பயனுள்ள பணியாற்றும் வாய்ப்பு கிட்டும்.

மலேயாவில் 249 இந்தியக் கைதிகள்

கோலாலம்பூர், நவ. 15—

மலேயாவில் அவசரச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் 5,543 பேர்களில் இந்தியர் 249 பேர்களென்று தெரிகிறது. சீனர்களும், மலாய்க்காரர்களுமாக 4518 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனரென்றும் அறியப்படுகிறது.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள்

வந்தவாசி-மாணவர்க் கிளை

வந்தை, நவ. 8—

31—10—49 அன்று, தோழர் கே. பி. நவாப்சான் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—வந்தவாசிக்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ். எச். ஏ' கன்சையத்; துணைச்செயலாளர்:—கே. நெடுமாறன்; பொருள் உறுப்பினர்:—கே. பி. நவாப்சான்; விளம்பரஉறுப்பினர்:- எஸ். கூத்தரசு. ஏனைய செயற்குழுவின:—வி. கே. சாமி, எம். எஸ். அனிபா, கே. நாதன், எஸ். சுகானந்தம்; எம். திருமால், எஸ். எ கே. நாதன், கே. ஆர். இளங்கோ, எம். அனிபா, வி. இராதாமணாளன்; கோ. இராசேந்திரன்.

(வி-உ)

* * *

மன்னார்குடி—மாணவர்க் கிளை

மன்னார்குடி, நவ. 8—

இவ்வூர் தோழர் நாராயணசாமி அவர்கள் இல்லத்தில் 3—11—49 அன்று, தோழர் இல இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில், "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—மன்னார்குடி கிளை" நிறுவப்பட்டு, பின்வரும் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:—சு. பஞ்சாபிகேசன்; துணைச் செயலாளர்:- செ. ந. அரசு; நிதி உறுப்பினர்:—சு. பரமசிவம்; விளம்பர உறுப்பினர்கள்:—எம். கே. இராதா, எஸ். முகமது சபார். மற்ற செயற்குழுவினர்கள்:—எஸ். இளங்கோ, ஜி. சுந்தரராசன், கே. கோவிந்தராசன், எஸ். இராமகிருட்டினன், ஜி. இராமமூர்த்தி, டி. செல்லையா, எஸ். ஆர். தங்கப்பன். மேலும் செயலுறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள செயலாளருக்கு உரிமை வழங்கப் பட்டது.

(செ-ர்)

* * *

தூத்துக்குடி—மாணவர்க் கிளை

தூத்துக்குடி, நவ. 8—

இவ்வூர் திராவிட மாணவர் கழகச் செயற்குழுக் கூட்டம் 15—10—49ல் கூடியது. அதுபோது திராவிட மாணவர் கழகம், "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—தூத்துக்குடிகிளை" என மாற்றியமைக்கப்பட்டுக்கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர்:—ஞா. செ. மகாலிங்கம், துணைச் செயலாளர்—சு. தர்மலிங்கம்,பொருள் உறுப்பினர்:- அ. பால்பாண்டியன், விளம்பர உறுப்பினர்:—சி. எம். இராஜாமணி. ஏனைய செயலுறுப்பினர்கள்—சி. ஜெகநாதன். மு. மணி, இரா. கிருட்டினன், இரா வாசுதேவன், ஜி. சுந்தரபாண்டியன். எஸ், சங்கரன், பி. வி. ஆர். பாண்டியன், சு. கிருஷ்ணசாமி.

(செ—ர்)

* * *

வத்தலகுண்டு—மாணவர்க் கிளை

வத்தலகுண்டு, நவ. 8—

இவ்வூர் திராவிட மாணவர்களின் கூட்டமொன்று; 14-10-49 அன்று தோழர் இப்ராகிம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, திராவிடமாணவர் கழகம் கலைக்கப்பட்டது. பின்பு "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—வத்தலக்குண்டுகிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—க. பொன்னுசாமி; துணைச்செயலாளர்:—வே. இஸ்மாயில், பிபொருள் உறுப்பினர்கள்—கா. சிக்கந்தர், விளம்பர உறுப்பினர்கள் த. வில்லியம், ச. பா. குருசாமி. ஏனைய செயலுறுப்பினர்:—சுப்பையா மாணிக்கம், ஆறுமுகம், சிவான், காதர்ஷா, பி.பாலுசாமி, புதுமைப் பித்தன், இளமதி, மணியரசு, பாபு, கு. கண்ணன்.

(வி—உ)

* * *

வேலூர்—மாணவர்க்கிளை

வேலூர், நவ. 8—

இவ்வூர்திராவிட மாணவர்கழகக் கூட்டம் தோழர் டி. வி. இராமமோகன் தலைமையில் 8-10-49ல் நடைபெற்றது. அதுபோது திராவிட மாணவர் கழகம், "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்-வேலூர்க்கிளை" என மாற்றியமைக்கப்பட்டுக்கீழ்க்கண்ட செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-வே.ம. இலக்குவன், துணைச் செயலாளர்—டி.வி. இராமமோஹன், நிதி உறுப்பினர்:—மு. சொமுலு. மீண்டும் 19—10—49ல் அக்கழகம் கூடி, கீழ்க்கண்ட செயற்குழுவினரைத் தேர்ந்தெடுத்தது. செயலுறுப்பினர்கள்:—சி. எஸ். ஏமச்சந்திரன், வி. எல். சச்சிதானந்தம், வி. ஆர். லோகாபி, கனகசபாபதி, எல். இராமநாதன், என். கோவிந்தராஜன், பி. எத்திராஜன்.

* * *

மதுரை மாணவர்க்கிளை

மதுரை, நவ. 11—

10—11—49ல் தோழர் மது இ. பழனியப்பன் தலைமையில்நடைபெற்ற திராவிட மாணவர் கூட்டத்தில்" திராவிடமாணவர் முன்னேற்றக்கழகம்—மதுரை கிளை" நிறுவப்பட்டது. தோழர்கள் கூத்தரசன், அய்யணன் ஆகியோர் மாணவர் கழகத்தின் நோக்கம்பற்றி பேசினார்கள். பின்பு கீழ்க்கண்ட செயற்குழுவினர் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்—கூத்தரசன். ஏனைய செயற்குழுவினர்—இ. பழனியப்பன், அய்யணன், நாராயணன், காசிராஜன், சுப்பிரமணியன்.

* * *

ஆற்காடு—மாணவர்க்கிளை

ஆற்காடு, நவ. 11—

6—11—49ல் இவ்வூரில் நடைபெற்றக் கூட்டத்தில், "திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்—ஆற்காடு கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—சுப்பிரமணி, துணைச் செயலாளர்—மணி எழிலன், பொருள் உறுப்பினர்:—நடராசன், விளம்பர உறுப்பினர்:—கண்ணன். ஏனைய செயற் குழுவினர்—இராமச்சந்திரன், கோவிந்தன், எஸ். மணி, கலைச் செல்வி, சுசீலா. பின்பு ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

கிணறு வெட்டும் உதவித் திட்டம்

தொடரலாமென நம்பிக்கை

சென்னை, நவ. 14—

கிணறு வெட்டும் உதவித்திட்டத்தைக் கைவிடவேண்டிய அவசியம் வராதென்றும், இந்திய சர்க்கார் சென்னை மாகாணத்துக்கு இதுவரையில் ஓரளவு கிராண்ட் அளித்து வருவார்களென நம்பப்படுகிறதென்றும் சென்னைத் தொழில் மந்திரி தோழர் சீதாராமரெட்டியார் 14-ந் தேதியன்று மேல்சபையில் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி தோழர்களுக்கு

தூத்துக்குடியில் நாடகங்கள் நடத்துவது சம்பந்தமாகக் கழகத் தோழர்களோடு கலந்து பேசி, கமிட்டி ஒன்று நிறுவ அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தூத்துக்குடிக்கு வருகிறார்கள். 20—11—49ம் நாள் காலை 10-மணியளவில் நடைபெறும் கூட்டத்தில் அவர் கலந்துகொள்வார்.

பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்
சென்னை.

"சுற்றுப் பயணத்தின் முடிவு"

தோழர் எம். என். ராய் அவர்களை ஆசிரியராகக்கொண்டு பம்பாயிலிருந்து வெளிவரும் 'ராடிகல் ஹ்யூமனிஸ்ட்' ஆங்கில வார இதழ் தனது நவம்பர் 13-ந் தேதி வெளியீட்டில் 'சுற்றுப் பயணத்தின் முடிவு' என்ற தலைப்பில் எழுதுவதாவது:—

பிரதம மந்திரியின் அமெரிக்க சுற்றுப் பயணம் முடிவடைந்துவிட்டது. தனது "அற்புதமான, உள்ளத்தைக் கிளர்க்கூடிய" சுற்றுப்பயணத்தின் விளைவைச் சுருக்கிக் கூற வந்த பிரதம மந்திரி, அது (விளைவு) இந்தோ-அமெரிக்க உறவு முறைகளை, 'அடிப்படையிலேயே' மாற்றும் தகைமையுடையதென்றும், அது காரணமாக 'இருநாட்டாரிடையேயுமுள்ள எல்லாவகைப் பிரச்னைகளும் சுமுகமாகவும் நேச மனப்பான்மையிலும் தீர' ஏதுவேற்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார். இவை மிக மிகப் பொதுவான கருத்துரைகளாகும்; குறிப்பிடத்தக்க அளவில் இவற்றில் பொருட்செறிவே கிடையாது. அடுத்துவரும் ஓரிரண்டு மாதங்களில்தான் அவரது சுற்றுப் பயணத்தின் உருப்படியான விளைவுகள் தாண்டவமாடப்போகின்றன. கோதுமைக் கப்பல்பட்டாள முதல் அமெரிக்க மூலதனம் ஆற்றெழுக்கென வருவதுவரை — அதன் காரணமாக — அமெரிக்க வல்லரசுகளின் சுழலில் இந்தியாவும் விழுவதுவரை அவ் விளைவுகள் உருவாகலாம்.

சுற்றுப்பயணம் பிரதம மந்திரிக்குத் தனிப்பட்டமுறையில் மாபெரும் வெற்றியே. அவர் சுற்றுப்பயணம் செய்த இடத்திலெல்லாம் அவருக்கு மாபெரும் வரவேற்புகளே, பாராட்டுகளே, விளம்பரங்களே கிடைத்திருக்கின்றன; அவற்றால் அவர் பெருமிதமுற்றுதான் காணப்படுகிறார். அந்த வகையில் அவர் குறைபட அமெரிக்கர் எள்ளளவும் இடம் வைக்கவில்லை. எனவே, பண்டித நேரு அமெரிக்க மக்களின் நல்லெண்ணத்தையும் நேசமனப்பான்மையினையும் கண்டு அவர்களது வாழ்க்கை முறையின் சிறப்பைத் தெரிந்து மனநிறைவுடன் தாயகம் திரும்பியுள்ளார். இது இந்தியா அமெரிக்காவோடு கொண்டிருக்கும் உறவை மட்டுமல்ல, அமெரிக்காவல்லாத இதர உலக நாடுகளுடன் கொண்டிருக்கும் உறவையும்—சிறப்பாக, அவ்வுறவையும்—'அடிப்படையில்' பாதித்தே தீரும்.

ஆம், அதுதான் தேசீய சங்கம்!

பண்டித நேரு பிறந்தநாள் விழாக் கூட்டத்தில் பேசியிருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தோழர் காமராஜர், தான் சார்ந்திருக்கும் தேசிய சங்கத்தின் பிற்போக்குத் தத்துவத்தையும், வியாபகத்தையும் சொல்லாமற் சொல்லியிருக்கிறார்.

காமராஜர் பேசினர்: "சோஷலிஸத்தினுடையவும், கம்யூனிஸத்தினுடையவும் அடிப்படைக் கொள்கைகளை நேரு அறியாதவரோ, அவற்றின் மாட்டு அனுதாபமற்றவரோ அல்லர். இன்று அவரோ, அவரது சர்க்காரோ சோஷலிஸ்ட் அல்லது கம்யூனிஸ்ட் பாதையில் முற்றிலும் புகுந்து நடக்கவில்லையென்றால் அதற்குக் காரணம் மக்களும் நாடும் இன்றுள்ள நிலையில் மக்கள் பகுதியினர் ஒவ்வொருவருடையவும் ஒத்துழைப்பும் சர்க்காருக்கு வேண்டியிருக்கிறது"

காமராஜர் தன்னையறியாமலேயே 'கக்கி'விட்ட இவ்வுண்மைதான் தேசிய இயக்கத்தின் 'ஜீவன்' ஆகும். தேசிய இயக்கமொன்று பெருமுதலாளிகளின்— பணமூட்டைகளின் அன்பாதரவு அபரிமித ஒத்துழைப்பின்றி உயிர் வாழ முடியாது. இன்னும் உண்மையைக் கூறவேண்டுமானால் முதலாளித்துவமும், பணக்காரர்களும் தங்கள் நலனைப் பாதுகாத்துக்கொள்ள நிறுவிக்கொள்வதே, அல்லது புகுந்துகொள்ள 'லைசென்ஸ்' வழங்குவதே தேசிய சங்கமாகும். உலக வரலாறுகள் இதைத்தான் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

எனவே தேசிய சங்கத்தின் இலக்கணமறிந்த நமக்குக் காமராஜரின பேச்சு ஆச்சரியமூட்டவில்லை. ஆனால் உண்மையை எப்படியோ ஒருவகையில் 'கக்கி' தீரவேண்டிய நிலைமை வந்துற்றதற்கு மகிழ்கிறோம்.

கிளைக் கழகங்களுக்கு

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு, கோவை, வடஆற்காடு ஆகிய இரு மாவட்டங்களிலும், மாவட்டக் கழகங்கள் நிறுவியிருப்பது குறித்து அமைப்புக்குழு நன்றி செலுத்துகிறோம்.

கோவை, தென் ஆற்காடு மாவட்டங்களில் இனி, கழக உறுப்பினர் சேர்க்கும் ரசீது புத்தகங்களை மாவட்டக்கமிட்டி மூலம் பெற்று, சந்தாத் தொகையுடன் மாவட்டக்கமிட்டி மூலமே தலைமைநிலையத்துக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

இதுவரை மாவட்டக்கமிட்டிகள் நிறுவாத மாவட்டங்களில் மட்டும் அமைப்பாளர் மூலமாக உறுப்பினர் ரசீது புத்தகங்களின் சந்தாத் தொகையை நேரடியாக தலைமை நிலையத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

என். வி. நடராசன்
செயலாளர்
தி. மு. க. அமைப்புக்குழு
தலைமை நிலையம்

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

18-11-49

சென்னை-திருவல்லிக்கேணி :— இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், டி. எஸ். வேலன்.

பழைய வத்தலகுண்டு:— ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

ஜெயங் காண்டான் :— சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன்

19—11—49

திருவானைக்காவல் :— ஈ. வெ. கி. சம்பத், சி. பி. சிற்றரசு

சேலத்தில்மாபெருங்கூட்டம்

சீனிவாசன்--கருணாநிதி முழக்கம்

செவ்வாய்ப்பேட்டையில்

சேலம், நவ. 14—

13-11-49 காலை 9-மணிக்கு செவ்வாய்ப்பேட்டை மேற்கு வட்டம் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்க விழா, தோழர் ப. கண்ணன் அவர்கள் தலைமையின்கீழ் ஆரம்பமாயிற்று. பந்தல் நிறைய மக்கள் குழுமியிருந்தனர். திராவிட நாட்டுப் பண்கள் பாடப்பெற்றன. தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றம் குறித்து நீண்டவிரிவுரையாற்றி கொடியேற்று விழா நிகழ்த்தினர். அடுத்து தோழர் மு. கருணாநிதி அவர்கள் கைத்தறி நெசவாளர் படுந்தொல்லைகள் பற்றியும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்கால வேலைமுறைகள்பற்றியும் குறிப்பிட்டு துவக்கவிழா சொற்பொழிவாற்றினர். பகல் 12-மணிக்கு செயலாளர் நன்றி கூறலுடன் துவக்கவிழா இனிது முடிவுற்றது.

மாபெரும் பொதுக்கூட்டம்

மாலை 6-மணிக்கு விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில் தோழர் ஆர். நாராயணசாமி அவர்கள் தலைமையில் செவ்வாய்ப்பேட்டை மேற்கு வட்டகிளை-செவ்வாய்ப்பேட்டைக் கிளை-அரிசிபாளையம் கிளை- குகை கிளை-அம்மாபேட்டைமெயின் ரோடு கிளை- பொன்னம்மாபேட்டை கிளை- ஆகிய கழகங்களின் சார்பில் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. மைதானமகொள்ளாதகூட்டம் பத்தாயிரத்துக்கு மேற்பட்டவர்கூடியிருந்தனர். மைதானத்தில் இடமின்றி சாலையோரங்களிலும்-மதிற் சுவர்களிலும் ஒதுங்கி நின்று ஆயிரக்கணக்கானவர் கூட்டத்தை கவனித்தனர், திராவிட நாட்டுப்பண் பாடப்பட்டது. தோழர் இ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் சிறிது நேரம் பேசினர்,

டி. கே. சீனிவாசன்

தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், "நேரு அமெரிக்காவில் பெருமைப்பட்ட ஆச்சரியகரமான செய்தியல்ல வெற்றிலை பாக்குக்கடை முதலாளிகூட வியாபாரம் செய்ய வருகிற தோழனைப் பார்த்து க்ஷேமம் விசாரித்து—உபசரித்து—கடைசியில் வியாபாரத்தை வெற்றிகரமாக முடித்துக் கொள்கிறான். அதுபோலத்தான் அமெரிக்க முதலாளிகள் நேருவை சிராட்டிப் பாராட்டி கடைசியில் தங்கள் சுயநலத்தை நிறைவேற்றிக்கொள்ளத் திட்டம்போட்டுள்ளார்கள். அமெரிக்க நாட்டையும், அங்குள்ள மக்களையும் பார்ப்பதற்காகப் போனதாக நேரு சொல்கிறாரே; அது உண்மைதானென்றால், நேரு வலியப் போயிருக்கவேண்டும் ட்ருமனின் அழைப்புகிடைத்த பிறகு போயிருக்க வேண்டிய அவசியமில்லை" என்று தன்னுடைய பேச்சில் குறிப்பிட்டார்

மு. கருணாநிதி

கடைசியாகத் தோழர் மு. கருணாநிதி அவர்கள், "வடநாடுபதென்னாடும் இன்றுள்ள நிலைமையை நினைக்கும்போது, 'அபூர்வ சகோதரர்கள்' படம் மனக்காட்சியாகிறது. படத்திலே விஜயனுக்குவரும் உணர்ச்சிகளால் தன்பங்களால்—விக்ரமன் கஷ்டப்படுகிறான் அதுபோலவே மத்ய சர்க்கார் செய்கிற காரியங்களால் ஏற்படுகிற தொல்லைகளை தென்னாடு அனுபவிக்க வேண்டியிருக்கிறது. விஜயனுடைய இன்பங்களிலே மாத்திரம் விக்ரமனுக்கு பங்கு கிடையாது படத்திலே! பதிலாக விஜயனுக்கு வேடிக்கையென்றால் விக்ரமனுக்கு வேதனை ஏற்படுகிறது அதுபோலவே வடநாடு உலக பாங்கியிலிருந்து வாங்கும் கடன்களைக்கொண்டு வடநாட்டிலுள்ள தரிசு நிலங்களையும் காடுகளையும் அழித்து, உழுது பயிரிட்டு வளமாக்குகிறது. ஆனால் தென்னாடு தேய்கிறது. வாங்கிய கடனிலே சிறிது கேட்டாலும் மத்திய சர்க்கார் தர மறுக்கிறது. இந்த அவல நிலைமையை தேசீயத் திருவுருவங்கள் நினைத்துப் பார்க்க வேண்டாமா?" என்று தன்னுடைய பேச்சில் குறிப்பிட்டார்.

கூட்டம் சுமார் மூன்று மணி நேரம் அமைதிக்குப் பங்கமின்றி — பல்லாயிரவர் இடையிடையே காட்டிய குதூகல உணர்ச்சி ததும்பத் ததும்ப—வெற்றியோடு நடைபெற்று இரவு 9-மணிக்குச் செயலாளர் நன்றி கூறலுடன் இனிது முடிவுற்றது.

(வி. உ.)

அரசியல் ஒழுங்கீனம்!

"பிரசாரகர்களைப்பொறுக்குவதில் என்ன யோக்கிய தாம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும். என்பது பற்றி சில தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. ஏற்கனவே மதுவிலக்குப் பிரசாரத்திலோ, தியாகிகளை நாடுபடுத்தவோ கஷ்ட நஷ்டமடைந்தவர்களும், பேச்சுத் திறமையுள்ளவர்களும் இந்த உத்யோகத்துக்கு லாயக்குள்ளவர்களாகமதிக்கப்படுவார்களாம். இவ்வாறு யோக்கியதாம்சம் கூறிப்பிட்டதை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. இந்த உத்யோகம் அவசியமில்லை என்பதுதான் நமது வாதம். ஆயினும் இந்த யோக்கிய தாம்சத்தைப் பார்த்தால் பழைய காங்கிரஸ்காரருக்காகச் சில உத்யோகங்கள் "சிருஷ்டிக்கப் படுகின்றன" என்று மற்றக் கட்சியினர் புகார்கூற இடமேற்படும். தியாகம் செய்தவர்களுக்கு ஏதேனும் மானியம் கொடுப்பது ஒருவேளை பொருத்தமாக இருக்கலாம். ஆனால் சிலருக்கு சிறிது காலம் சம்பளம் கிடைக்கவேண்டுமென்பதற்காக உத்யோகங்களை 'சிருஷ்டிப்பது' உசிதமாகாது. இது அரசியல் ஒழுங்கீனம் என்றே மதிக்கப்படும்."

—"தினமணி"
11—11—49

தி. மு. க. பொதுக்கூட்டம்

சென்னை, திருவல்லிக்கேணி தி. மு. க. கிளையின் சார்பில் 18—11—49 வெள்ளி மாலை 5-30 மணிக்கு, தோழர் டி. என். இராமன் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., கே. ஏ. மதியழகன் பி. ஏ., ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழர் க. ந. இராமநாதன் வ. உ. சி. படத்தைத் திறந்துவைப்பார். ஒலிபெருக்கி உண்டு.

இடம் :— திருவல்லிக்கேணி ஜெனரல், சுவாமி நாயக்கன் தெரு (ஜாம் பஜார் மார்க்கெட் சமீபம்)

சந்தா

[வெளி நாடு]

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி: மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர் 'மாலைமணி'

சில பல கூறுமுன்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பறித்து விட்ட காவிய ஏட்டை. இங்குள்ள ஏழைத் தொழிலாளர் பஞ்சத்தால் மடிய, இங்கிலாந்திலே உள்ளோர் உயர்ந்த வாழ்வு வாழ, அதுவும் நமது உழைப்பால் இன்பம் பெற, நாம் இனியும் இடம் தருவது கூடாது என்பதுதானே, இங்கிலாந்து ஆடையை அக்கினியில் இட்ட செயல் விளக்க முரைக்கிறது. திராவிட இனத்தைப்பழித்து, அந்தப் பழிப்பிலே, தமக்கு இயல்பாகப் பொருத்தமற்ற புகழை ஆரியம் பெற்று மகிழ்வதுகூடாதுஎன்பதைத்தானே கம்பன் காவியத்திற்கு நாம் தீமூட்ட நினைத்தது விளக்க முரைக்கிறது.

இங்கிலாந்திலே உற்பத்திச் செய்யப்படும் துணிக்குக் கவர்ச்சி இல்லை— நீடித்த உழைப்பில்லை— மெல்லிய தன்மை இல்லை—விலையில் நயமில்லை என்ற இத்தகைய காரணங்களுக்காகவா, முன்னாள் காங்கிரசார், இரண்டொரு அன்னியத் துணியைத் தீயிலிட்டு மகிழ்ந்தது? அல்லது அத் துணியின் உயர்வை, அறிந்துகொள்ளும் ஆற்றல் காங்கிரஸ்காரர்களுக்கு இல்லாத காரணத்தாலதான், அது போன்று நடந்துகொண்டார்கள் என்று எவராவது கூற முன்வருவார்களா? இப்படியும் கூட கூறி இருப்பர், மாதவமேனன் போன்றவர்களுக்கு, அதுபற்றிப் பேச அன்று வாய்ப்பளித்திருந்தால்!

கம்பனைக் கற்கும் முறையை அறிவோம்—கவித் திறத்தைத் தெரியும் திறமுடையோம்—நயத்தை நாட்டுக்குக் கூற நல்ல நாவுடையோம்—கனம் மந்திரி போன்று, நாம் தமிழ் மொழி அறியாது, தமிழ் காவியத்தைக் குறித்துப் பேசும் பெரும் பண்பும் படைத்தறியோம்! கம்பரின் இரு ஏட்டைக் கொளுத்திவிடுவதாலேயே, ஏதோ கம்பரால் தோற்றுவிக்கப்பட்ட உயர்ந்த கோட்பாடுகள் மக்கள் இருதயங்களிலே குடிபுகுந்துவிட்டிருக்கிறதாகத் தீர்மானித்துக்கொண்டு, அதைக் களை அழித்துவிட முடியாது என்று, வலுவோடு விடையையும் தாமே கூறிக்கொண்டு, மந்திரி மாதவர், நம்மீதுள்ள ஆத்திரத்தையும், தமக்கு வேண்டியிருக்கும் சாந்தியையும் ஒரு சந்தர்ப்பத்தில் தேடிக்கொள்ள முயன்றிருக்கிறார்! ஐயோ பாவம்! அவர் ஆத்திரம் தீரட்டும்! மனச் சாந்தியும் பெறட்டும்!

புலவர் குழந்தை எழுதிய இராவண காவியத்தைத் தடுத்தாரே, சட்ட விரோதமான நூலென்று, இந்தச் சட்ட மந்திரியார், அந்தத் தடுப்பு முறையால் இவர் எந்தக் கருத்தைப் பரவ விடாமல் தடுத்துவிடலாமென்று தீர்மானித்திருந்தார்? ஒரு புத்தகத்தைத் தடுத்துவிடுவதாலேயே, அந்த நூல் எழுதுவதற்காக இருந்து வரும் மூல காரணத்தை வளரவிடாமல் தடுத்துவிட முடியாது என்பது அவர் அறிவில் புலனாகாமல் போனது ஏன்? என்ன சமாதானம் இவரிடம் இருக்கிறது இதற்கு? இராவண காவியம் பற்றுதலானால் என்ன? 'இலங்கை வேந்தன் அகவல்' உருவாகுமே என்பதை ஏன் இவர் மறந்தார்? சட்ட மந்திரியாம் இவர் சட்ட மந்திரி!

இனியாவது சில பல கூறுமுன், கொஞ்சம் தமது சிந்தனைக்கு இடமளித்து, சீரிய கருத்துக்களைத் தெரிவிக்கட்டும் இவர். 'ஏதோ மந்திரியாய் இருப்பதால் என்னை அழைத்தீர்கள். அதற்காக நானும் ஏதாவது நாவசைத்துத் தொலைக்கிறேன்' என்று பேசாமல் இருந்துவிடுவது, இவர் இருந்துவரும் பதவிக்காவது பெருமை அளித்ததாக இருக்குமே! திருந்துவாரா மந்திரி மாதவர்?

அநியாயம்!

★

"மாகாணம் முழுதிலும் சுமார் 440 (மதுவிலக்குப்) பிரசாரகர்களை நியமிக்க திட்டம் போடப்பட்டிருக்கிறதாம். தாலுகாவுக்கு இரண்டு பிரசாரகர்களாம். இவர்களுக்குச் சம்பளம் ரூ. 100 என்றால், மாதம் சுமார் 44,000 ஆகும். பிரயாணச் செலவும் அனுமதிக்கப்பட்டால், மாதம் 60,000 ஆகலாம். வருஷத்துக்கு சுமார் 7 லக்ஷம் ஆகிறது. இவ்வாறு வரிப் பணத்தில் 7 லக்ஷம் ரூபாயை விரயம் செய்ய எவ்வித நியாயமும் கிடையாது."

—"தினமணி" 11—11—49

வேலாயுதம் கொலை வழக்கு

சர்க்கார் அப்பீல் செய்யாதாம்

செலவுப் பட்டியல் தருகிறார் மந்திரி

சென்னை சட்டசபையில் தோழர் கே. லிங்கராஜூ கேட்ட கேள்வி யொன்றுக்கு மந்திரி மாதவமேனன் பதில் கூறுகையில், உடையார் பாளையம் ஆசிரியர் வேலாயுதம் கொலை வழக்கு சம்பந்தமாகப் புலன் விசாரணைகள் செய்வதற்கு விசேஷப் போலீஸ் சிப்பந்திகளுக்கு ரூ. 10,570 பிடித்ததென்றும் குறிப்பிட்டார். பிராசிக்யூஷன் வழக்கை மேற்கொண்டு நடத்திய ஸ்பெஷல் பப்ளிக்பிராசிக்யூட்டர் தனது செலவுத் தொகையாக ரூ. 7,868 கோரியுள்ளாரென்றும் தெரிவித்தார்.

மந்திரி மேலும் குறுக்குக் கேள்விகட்குப் பதில் கூறுகையில், இவ்வழக்கில் சாக்கார் வழக்கறிஞருக்கு அதிகம் கவலை எடுத்துக்கொண்டது என்ற கூற்றுகளை ஆட்சேபித்ததோடு, சட்ட வல்லுனர் கருத்தைக் கேட்டபின்பே வழக்கு தொடரப்பட்டதென்றும், இப்பொழுது எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுவிட்டதால் மேற்கொண்டு அப்பீல் செய்யும் எண்ணம் தனக்கு இல்லை யெனக் குறிப்பிட்டார்.

இனி நடப்பவை

திருச்சி— திருச்சி மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 20—11—49 ஞாயிறு காலை, 10-மணிக்குத் திருச்சி "கருணாநிதி பார்க்"கில் நடைபெறும். அதுபோது திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டு வரவேற்புக் குழு அமைக்கப்படும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அக் கூட்டத்தில் கலந்து கொள்வார். எனவே இம்மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கழகமும் இரண்டு பிரதிநிதிகளைத் தவறாது அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகிறது.

* * *

சென்னை— சென்னை புரசைப் பேட்டை (31-வது வட்டம்) தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 16—11—49 புதன் மாலை 6-மணிக்கு (26, சைபால் முல்க் தெரு) கழகக் கட்டிடத்தில் நடைபெறும், பின்னர் 7½ மணிக்குப் பொது உறுப்பினர்கள் கூட்டமும் நடைபெறும். உறுப்பினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

அதுவும் கட்டாயமாம்!

சுதந்திர ஆட்சியில் எடுத்ததற்கெல்லாம் 'கட்டாயம்' என்ற சொல் அடிக்கடி அடிபடுகிறது. அரசியலார் எதையேனும் இன்றை மக்களிடையே புகுத்த வேண்டுமானால் அதனைக் கட்டாயமாகப்புகுத்துவதில் கை தேர்ந்தவர்கள் நமது ஆட்சியாளர். ஹிந்திமொழியைத்தமிழ் நாட்டில்பரப்ப வேண்டும் என்று விரும்பினார்கள்; உடனே அதனைக்கட்டாய பாடமாக்கினர். இப்பொழுது கொஞ்ச காலமாகக்கம்ப ராமாயணத்தை அளவுக்கு மீறிப் போற்றிப் புகழவும் அதனை வேண்டுமென்றே மக்களிடைப் பரப்பவும் ஆரம்பித்திருக்கின்றனர். சரி, தொலைந்து போகட்டும். அதைப்பற்றி கூட நமக்குக் கவலையில்லை. ஆனால் அண்மையில் சென்னையில் நடைபெற்ற கம்பர் மாநாட்டில் பேசிய கல்வி அமைச்சர், கம்பராமாயணத்தைக்கூட கட்டாயபாடமாக்க வேண்டும் என்று பேசியிருப்பதைப் பார்த்து தான் வருந்த வேண்டியிருக்கிறது. கம்பராமாயணம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமாம்! இது கல்வி அமைச்சரின் வாதம். அமைச்சர் புத்திசாலி அல்லவா? ஆகவே, கம்ப ராமாயணத்துக்கு மாத்திரம் தனியாக ஆதரவு காட்டினால் அதற்குள்ள எதிர்ப்பு மேலும் வளர்ந்து விடும் என்று நினைத்து கம்பருக்குத்துணையாக வள்ளுவரையும் சேர்த்து குறளும், கம்பராமாயணமும் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறார் ஆம், கம்பராமாயணம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டியது தான்! அப்பொழுதுதான் கம்பனை மக்கள் சரிவர தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். ஆரிய-திராவிடப்பிரச்னையுக்கும் ஆக்கம் ஏற்படும்.

'மதுவிலக்கு அதிகாரிகளே மதுவருந்துகின்றனர்!'

'இதற்குமுன்பு குடித்தறியாப் பெண்டிரும் பிள்ளையும் இப்போது குடிக்கின்றனர்!'

'இது சகஜம், இது சகஜம்' என்கிறார் மந்திரி!

சென்னை சட்டசபையில் (கவுன்சில்) 14-ந் தேதியன்று மதுவிலக்குபற்றி ரசமான கேள்விகளும் பதில்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மதுவிலக்கை அமுல் செய்து கண்காணித்துவருவதற்கென்றே நியமிக்கப்பெற்ற அதிகாரிகள் சிலர் குடிப்பழக்கம் உடையவர்களென்பதையும், அவர்கள் இப்போதும் குடித்தே வருகிறார்களென்பதையும் சர்க்கார் தெரிவார்களா என்று டாக்டர் ஜான் கேட்டுள்ளார்.

இதற்குப் பதில் தந்த மதுவிலக்கு மந்திரி, 'இது சகஜம் தான். இதுபோன்ற நபர்களைபற்றி சர்க்காருக்குத் தகவல் தந்தால், அவர்கள் உறுதியாய்த் தண்டிக்கப்படுவார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

"இதற்கு முன்பு குடித்தறியா பெண்டிரும் பிள்ளைகளுங்கூட இப்போது திருட்டுச் சாராயம் குடிக்கத் தலைப்பட்டு விட்டனரென்று முன்னாள் மதுவிலக்கு மந்திரிதோழர் கோட்டி(ரெட்டி) கருத்துரை தந்திருப்பதைச் சர்க்கார் கவனித்தார்களா?" என்று டாக்டர் ஜான் கேட்டதற்கு, "இது சகஜம், ஆனால் எங்கும் இது நடக்கிறது என்று கூறுதல் முடியாது" என்று மந்திரி தெரிவித்தார்.

மலான்செய்தால்...!

தோழர் வி. சக்கரைக்கு 'பாஸ் போர்ட்' மறுப்பு

நவம்பர் 16-ந்தேதியன்று பீகிங்கில் ஆரம்பமாகும் உலகத் தொழிற்சங்க சம்மேளன ஆசிய மண்டல மாநாட்டில் கலந்து கொள்ள விருந்த அகில இந்தியத் தொழிற் சங்க காங்கிரஸ் தலைவர் தோழர் வி. சக்கரை செட்டியாருக்கு இந்திய சர்க்கார் 'பாஸ் போர்ட்' வழங்க மறுத்து விட்டார்களென்று தெரிகிறது. இப்போது ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்து வரும் அகில இந்தியத்தொழிற் சங்க காங்கிரஸ் உறுப்பினர் தோழர் ஆர். எம். ஜாம்பேக்கர் அ. இ. தொ. ச. க. சார்பில் மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறாரெனத் தெரிகிறது.

அறிவிப்பு

ரெஜிஸ் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

தமிழருக்கு பெருமையளிக்கும் சரித்திர நாடகம்

டி. கே. எஸ். சகோதரர்களின் மேடை வெற்றி!

தமிழரையும், தமிழ் மொழியையும் இகழ்ந்து பேசிய வட ஆரியரை அடிபணியச்செய்த சேரன் செங்குட்டுவனின் வீர சரிதை!

17—11—49 முதல் தினசரி

18—11—49 மாலை நாடகத்திற்கு திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமைவகிப்பார்.

ஞாயிறு, புதன், வெள்ளி, மாலை 6-மணிக்கு
செவ்வாய், வியாழன், சனி இரவு 9-15 மணிக்கு

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.